# 6

# இயேசு தாம் யாராக இருந்ததாக கூறினார்?

ஒருமுறை நான் ஒரு புதிய ஏற்பாட்டு கல்வியாளர் "இயேசு தேவனாக இருந்தாரா?" என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவில் கலந்து கொண்டேன். இப்படிப்பட்ட ஒரு முக்கியமான கேள்வி குறித்த இந்த பெரிய மனிதரின் கருத்துகளை கேட்க விரும்பிய மக்களால் அரங்கம் நிறைந்திருந்தது. இந்த கேள்விக்கு பதில் அளிக்க அவர் இவ்விதமாக துவங்கினார். யோவான் சுவிசேஷம் இயேசுவின் தெய்வீக தன்மை குறித்து பலமாக வலியுறுத்துவதால், யோவான் சுவிசேஷத்திலுள்ள எல்லாவற்றையும் நாம் பரிசீலிப்பதை நிறுத்த வேண்டும். அடுத்ததாக, அவர் இயேசுவின் தெய்வீகத்தை குறிக்கிற, புதிய ஏற்பாடு முழுவதிலுமுள்ளவற்றை நாம் ஒதுக்கிவிட வேண்டும், இவைகள் இயேசுவை நோக்கி செல்லாமல், இவைகள் ஆரம்பகால சபையின் சிருஷ்டிப்புகளாக இருக்கின்றன என்றார். பிறகு, கூட்டத்தாரிடம் "இயேசு தேவனாக இருந்தாரா?" என்ற கேள்வியை நாம் கேட்கலாம் என்று கூறப்பட்டது. பேச்சாளர் ஒரே ஒரு முடிவுக்கு மட்டும் தான் வரமுடிந்தது. எதிர்மறையான கருத்துக்களோடு ஆரம்பித்து மற்றும் எதிராக எல்லா சாட்சியங்களையும் அழித்து அவர் தேடின அந்த எதிர்மறையான பதிலை இயல்பாக கண்டுபிடித்தார்.

நசரேயனாகிய இயேசுவின் நபர் தன்மையை குறித்து சூழ்ந்துள்ள வரலாற்று ரீதியான பெரிய காரியங்கள் அவருடைய சொந்த அடையாளத்தை பற்றியதாக உள்ளது: அவர் தாம் யாராக இருந்ததாக கூறினார்? அவர் தம்மை யார் என்று உரிமை கோரினாரோ, அவராகவே அவர் *இருந்தாரா* அல்லது இல்லையா என்பதிலிருந்து ஒருவித்தியாசமான கேள்வியாக இருக்கிறது. மதிப்புமிக்கதை எடுத்துப்போடுகிறவர்கள் எப்போதுமே இருந்துள்ளார்கள், அவர்கள் அவர் இஸ்ரவேலின் மேசியாவாக/தேவனுடைய குமாரனாக மற்றும் மாம்சத்தில் தேவனாக இருக்கவில்லை என உரிமை கோரினார்கள். இயேசுவைப் பற்றிய சமீப கால மறுதலிப்புகள் இவைகளில் ஒன்றாக அல்லது இவைகள் எல்லாவற்றிலும் இருந்து மாறுபட்டதாக இருக்கிறது. உரிமை கோரல் என்னவென்றால், அவர் இந்த கதாபாத்திரங்கள் ஏதொன்றையும் நிரப்பினதாக ஒருபோதும் *சொல்லவில்லை* மற்றும் அவர் தம்மை இந்த வழிகளில் பார்க்கவும் இல்லை என்பதாக இருக்கிறது. அப்படியானால், சுவிசேஷங்களில் சொல்லப்பட்டுள்ள அந்த கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன என்ற கேள்வியை நீங்கள் கேட்க கூடும். நமக்கு சொல்லப்படும் பதில் என்னவென்றால், பிற்காலத்தில் சபை இப்படியாக இயேசுவை *விசுவாசித்தார்கள்,* மற்றும் அவர்கள் அவைகளை சுவிசேஷங்களில், இயேசு இப்படியாக உரிமைகோரினதாக காணப்படும்படி எழுதினார்கள் என்பதே. வேறு வார்த்தைகளில், இந்த குறைகூறுபவரின் கூற்றுப்படி, சுவிசேஷங்களில் உரிமைகோரப்பட்ட அநேக காரியங்களை

இயேசு ஒருபோதும் செய்யவில்லை மற்றும் பிற்காலத்தில் கிறிஸ்தவம் அவரை என்னவாக மாற்றியதோ, அவர் அப்படி இருந்ததாக ஒருபோதும் உரிமை கோரவில்லை என்பதாகும்.

இயேசுவானவரைப் பற்றிய பிற காரியங்களில் உள்ளதுபோல, சுவிசேஷங்களில் நம்முடைய பிரதான தகவல் மூலங்களாகவுள்ளன. அவைகளை நம்பகமானவைகள் அல்ல என நிராகரிக்கிறவர்கள், இயேசுவைப் பற்றி நாம் ஒன்றும் அறியமுடியாது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். இயல்பாக, இது அவரை எல்லா விதமான வியாக்யானங்களும் விட்டுவிடுகிறது. வழக்கமாக, இந்த அணுகுமுறையை எடுத்துக்கொள்ளும் வியாக்யானம் பண்ணுகிறவர்கள், இயேசு யாராக இருந்தார் என்ற தங்கள் கருத்துக்களில் துவங்கி, அவரைப் பற்றி முன்னதாக அவர்கள் வரைந்திருக்கிற படத்திற்கு பொருந்தாத சுவிசேஷங்களில் உள்ள எல்லாவற்றையும் நீக்கிவிட வகை தேடுகிறார்கள். "இயேசு கருத்தரங்கம்" என்ற குழுவினரின் நிலை நிச்சயமாக இப்படித்தான் இருக்கிறது, இந்த குழுவினர் சபையிலிருந்தும் மற்றும் சபை அவரைப் பற்றி என்ன விசுவாசிக்கிறதோ அதிலிருந்தும் "இயேசுவை விடுதலையாக்க" அவருடைய வசனங்களை ஆராய்ச்சி செய்ய துவங்கினார்கள்.[1] அவர்கள் விவரித்த "இயேசுவானவர்" புதிய ஏற்பாட்டில் காண்பிக்கப்பட்டிருப்பவரை விட வித்தியாசமானவராக இருக்கிறார்.

மக்கள் எதை முன்னதாக நம்புகிறார்களோ அதன்படியாகவே சாட்சியங்களைக் கூட பார்க்கிறவர்களாயிருக்கிறார்கள், நாம் எல்லோரும் முன் அபிப்பிராயங்களை உடையவர்களாயிருக்கிறோம், மற்றும் அந்த முன் அபிப்பிராயங்கள், சாட்சியங்களை அதன் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க தூண்டுகிறது. சிலர் தன் சுயம் சம்பந்தப்படாமல் இதை செய்வதாக உரிமை கோருகிறார்கள், அது சாத்தியமல்ல. நாம் எல்லாரும் இயேசுவின் தெய்வீக அடையாளம் போன்ற முக்கியமான காரியங்களை பொருத்தவரை, நம் சுயமாக புரிந்து கொள்ளும் அறிவு உடையவர்களாக இருக்கிறோம். நாம் "முன் அபிப்பிராயம் இல்லாதவர்களாயிருப்பது" இயலாததாக இருப்பதால், நாங்கள் சுயம் சாராமல் செயல்படுகிறோம் மற்றும் சாட்சியங்களைப் பற்றிய எங்கள் கண்ணோக்கில் பிரச்சனைகள் எதுவும் இல்லை என்று உரிமை கோருவதைவிட, நமது முன் அபிப்பிராயங்களைப் பற்றி *நேர்மையுள்ளவர்களாயிருப்பதே* சிறந்ததாக இருக்கிறது.

முன்பு கூறப்பட்டது போல, சுவிசேஷங்களை இயேசுவுக்கான நம்பகமான தகவல் மூலங்களாக விசுவாசத்திற்குறியதாக மட்டுமல்ல, வரலாற்றுக்கு உரியதாகவும் ஏற்றுக்கொள்கிறேன். வேறுவிதமாக சிந்திக்கிறவர்கள், இதற்கு எதிரான ஆதாரங்களை கொடுக்க வேண்டும். மறுபடியும் மறுபடியுமாக, சுவிசேஷங்கள் தம்மை வரலாற்று ரீதியாகவும் மற்றும் கருத்து ரீதியாகவும் சரியானவைகள் என நிரூபித்துள்ளன. அப்படி இருக்கும்போது, அவைகள் இயேசுவைப் பற்றி கூறும் விஷயங்களில் மட்டும் சரியாக இல்லை என நாம் ஏன் யூகிக்க வேண்டும்? அந்த உரிமைகோரல்களை நாம் நம்புவதை தெரிந்து கொள்கிறோமா இல்லையா என்பது வேறு விஷயம். வரலாற்று ரீதியான தகவல் தொகுப்பு தன்னில் தானே ஒரு ஆவிக்குரிய உரிமைகோரல்களை உறுதிப்படுத்துவதும் இல்லை அல்லது மறுப்பதும் இல்லை என்பதை புரிந்து கொள்வது முக்கியமானதாக இருக்கிறது. ஆதார மூலங்கள் தங்களுக்காகப்

பேசும்படி அனுமதிப்போமாக.

உதாரணமாக, லூக்கா தனது சுவிசேஷத்தை துவங்கிய விதத்தை பார்க்கையில், அது ஒரு நேர்மையான வரலாற்று ஆசிரியராக, தனக்கு கிடைத்த தகவல்களை சரிபார்த்தபின், அதை தெயோப்பிலு என்பவரின் பயனுக்காக வழங்குகிறவராக காணப்படுகிறார். அவருடைய துவக்க வசனங்களை கவனியுங்கள்:

> மகாகனம் பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:1-4).

அதன் பின்னர், லூக்கா தனது செய்தியை ஒரு வரலாற்று குறிப்போடு துவங்கினார்: "யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில் .." (வசனம் 5). லூக்கா 3:1, 2 ல் கூறப்பட்டுள்ள வரலாற்று சூழ்நிலையை நினைவுகூருங்கள். "முன் ஒரு காலத்தில்" என்ற நிலை அவருடைய வேலையில் இல்லை.

லூக்கா சுவிசேஷத்தின் முன்னுரை பல விதங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. லூக்கா தனது வீட்டு வேலையை செய்துள்ளார். இயேசுவை குறித்து எழுத "அநேகம்பேர்" முயற்சித்ததை அவர் அறிந்திருந்தார். அவர் அவைகளை வாசித்திருக்கிறார் என்பதை நாம் அறிவோம். அவர் தான் அவைகளை "ஒழுங்காய்" எழுதுவதாக குறிப்பிட்டார். (மற்றவர்களுடையதில் அவர் எதை "ஒழுங்காய் அமையாததாக" கருதினார்? நமக்கு தெரியாது. அந்த மற்றவர்கள் யாராக இருந்தார்கள் என்பது கூட நமக்கு தெரியாது; அவர்கள் மத்தேயு, மாற்கு மற்றும் யோவானாக இருக்கவில்லை. ஏனெனில் லூக்காவின் பதிவுகள், மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரோடு நெருக்கமாக இணையாயுள்ளன மற்றும் பல கணக்கீட்டுகளின்படி யோவான் இன்னும் எழுதப்படாமலிருந்தது.) மேலும், லூக்கா தான் கண்ணால் கண்ட ஒரு சாட்சியாக இருக்கவில்லை என்று நேர்மையாக ஒத்துக்கொண்டார். ஆனால் அவர் சாட்சிகளாக இருந்தவர்களிடத்தில் விசாரித்து அறிந்திருக்கிறார். அவர், "ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே ..." என்று கூறினார் (லூக்கா 1:2). லூக்கா என்பவர் எழுதினதின் நோக்கத்தை கவனியுங்கள்: ... உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் *நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று* ..." (லூக்கா 1:4; வலியுறுத்தல் என்னுடையது). தெயோப்பிலு முன்னதாக ஒரு கிறிஸ்தவராக இருந்தாரா அல்லது இல்லையா என்பது நமக்கு நிச்சயமாக தெரிவதில்லை. அவர் கிறிஸ்தவத்தை குறித்து கொஞ்சம் அறிவு பெற்றிருந்தார், ஆனால் லூக்கா அது போதுமானதாக இருக்கவில்லை என கருதினார். அவர் தெயோப்பிலுவுக்கு உண்மையான செய்தியை கொடுக்க விரும்பினார். லூக்கா *என்ன நடந்தது* என்பதை சொல்ல தெளிவாக நோக்கம் கொண்டிருந்தார் (காணவும் நடபடிகள் 1:1). இதை சந்தேகிக்கிறவர்கள் லூக்கா பொய்யுரைத்தார் அல்லது

தவறிழைத்தார் என்பதற்கான ஆதாரத்தை கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

மற்ற சுவிசேஷங்கள் லூக்காவைப் போல தங்கள் வரலாற்று ரீதியான நோக்கங்களை தெளிவாக கூறாவிட்டாலும், இதே கருத்துக்கள் அவைகளை பற்றியும் கூறப்பட முடியும். அவர்களில் எவரும் வரலாற்று ரீதியான வெறுமையிலிருந்து இயேசுவின் கதையை கூறுவதில்லை. ஆரம்பகால சபையானது, இயேசு யாராக இருந்தார் மற்றும் அவர் என்ன செய்தார் என்ற எல்லாவற்றையும் உண்மையான சம்பவங்களாக ஏற்றுக் கொண்டிருந்தன. இந்த சம்பவங்களைப் பற்றிய இரண்டாயிரம் வருட உறுதியான கிறிஸ்தவ விசுவாசத்தை நாம் அலட்சியம் செய்கிறவர்களாயிருத்தால், நாம் உணர்வு சாராமல் செயல்படுகிறோம் (மற்றும் சகல அறிவு) என்று நமக்கு நாமே சொல்லிக் கொண்டு, அதை சுவிசேஷ எழுத்தாளர்களுக்கு மறுக்கிறவர்களாயிருப்போம், அவர்கள் நடந்த சம்பவங்களுக்கு மிக நெருக்கமாக வாழ்ந்தவர்கள் மற்றும் நேரடி சாட்சிகளாயிருந்தார்கள் அல்லது சாட்சிகளிடம் விசாரித்து அறிந்திருந்தார்கள்.

## யூதர்களின் ராஜா மற்றும் உண்மையான இஸ்ரவேலின் பிரதிநிதி

இயேசுவானவரின் சில உரிமை கோரல்கள் வார்த்தைகளில் இருக்கவில்லை, மாறாக பழைய ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்களில் சொல்லப்பட்டுள்ளவைகளின் படி தமது தெய்வீக அடையாளத்தை குறிப்பான காரியங்களில் வெளிப்படுத்தினார்.இவைகள் “நிறைவேறின உவமைகளாக” கருதப்பட முடியும்.

உதாரணமாக, மாற்கு 3:13-19 இயேசு தமது பன்னிரண்டு அப்போஸ்தலர்களை (அவர்கள் மாற்கு 3ல் அப்படி அழைக்கப்படாதிருந்த போதிலும்) ஏற்படுத்தியதை பதிவு செய்கிறது. நான்கு சுவிசேஷங்களும் கூடுதலாக அநேகர் இருந்தாலும் இந்த பன்னிரண்டு பேரை இயேசு ஒரு உள்வட்ட நபர்களாகக் கொண்டிருந்தார் என்பதை அங்கீகரிக்கின்றன, இன்னும் மற்ற பலர் இருந்த போதிலும், தனக்கு பின் வழிநடத்தும் பொருப்பை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களுக்கு போதித்து, பயிற்சி கொடுப்பதில் தன் பொதுவான ஊழியத்தை அதிகம் செலவழித்தார். அவர் ஏன் *பன்னிரண்டு* பேரை நியமித்தார் என்று எப்போதாவது நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா? ஏன் பத்து பேர் அல்லது இருபது பேர் அல்லது வேறு எந்த எண்ணிக்கையில் இல்லை? இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின், எஞ்சியிருந்த அவருடைய சீஷர்கள் (நூற்றி இருபது பேர் -120) தன் அப்போஸ்தல பட்டத்தை இழந்துவிட்டிருந்த யூதாவின் இடத்தில் மத்தியாவை தெரிந்தெடுத்தார்கள் என்பதை நடபடிகள் 1:15-26 கூறுகிறது. எண் “பன்னிரண்டு” என்பது சரியாக வைத்துக் கொள்ளப்பட்டது. இருப்பினும், அந்த பன்னிரண்டுபேர் மரிக்க துவங்கின போது, (நடபடிகள் 12:1, 2 இல் யாக்கோபின் மரணம் குறிப்பிட்டுள்ளபடி) யூதாசின் இடம் நிரப்பப்பட்டது போல, அவர்களுடைய இடம் நிரப்பப்பட*வில்லை*. எண் பன்னிரண்டு என்பதில் ஏதோ ஒரு முக்கியத்துவம் இருப்பது போல் இருக்கிறது.

தெளிவாக, இஸ்ரவேல் தேசம் அதன் ஒவ்வொரு கோத்திரமும்,

*பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களால் (யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்கள்) வழி நடத்தப்பட்டதுபோல இயேசுவானவர், தேவனுடைய புதிய ஜனங்களை வழிநடத்த பன்னிரண்டு பேரை நியமனம் செய்து கொண்டிருந்தார் (பின்நாளில் சபை என்று அழைக்கப்படலாயிற்று). இயேசு, தாம் ஒரு "புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேலை" உருவாக்குவதாக கண்டார்; ஆகவே அதற்காக பன்னிரண்டு அதிகார பூர்வமான தலைவர்கள் கொண்டிருப்பது அவசியமானதாக இருந்தது. (இந்த விளக்கத்திற்கான உறுதியை வெளிப்படுத்தின விசேஷம் 12:12-14இல் காணவும்; மேலும் பன்னிரண்டின் முக்கியத்துவத்தையும், வெளிப்படுத்தின விசேஷம் முழுவதும் அதன் பெருக்கங்கள் தேவ மக்களுக்கு அடையாளமாக இருப்பதையும் கவனியுங்கள்.)*

*இயேசு புதிய இஸ்ரவேலை வழி நடத்துவதற்கு பன்னிரண்டு அப்போஸ்தலர்களை ஏற்படுத்தியதால், இயேசு தம்மை இஸ்ரவேலின் புதிய ராஜாவாக கண்டார். அவர் இப்படிப்பட்ட கருத்தை கொண்டிருந்தார் என்பது கடைசியாக அவர் எருசலேமில் பிரவேசித்த விதத்தில் விளக்கப்படுகிறது. மத்தேயு 21:1-5, அவர் ஒரு கழுதையின் மேல் ஏறிசென்றதாக கூறுகிறது. ஒரு ராஜா தனது தலைநகரில் சாதாரணமாக இவ்விதம் பிரவேசிப்பது என்பது கடினமானதாக இருக்கும்! இயேசு என்ன செய்து கொண்டிருந்தார் மற்றும் அதை அவர் ஏன் செய்தார்? மத்தேயு, இயேசுவானவர் இந்த குறிப்பிட்ட விலங்கின் மீது ஏறி எருசலேமுக்குள் செல்வதற்கான துல்லியமான ஆயத்தங்களை கொடுத்திருப்பதில் இருந்து, அது தற்செயல் நிகழ்வாக இருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறார். அந்த வசனப்பகுதி சகரியா 9:9 உடன் ஒப்பிடும் போது அதற்கான காரணம் தெளிவாக தெரிகிறது:*

> *சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு!*
> *எருசலேம் குமாரத்தியே கெம்பீரி!*
> *இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்;*
> *அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும்,*
> *கழுதையின்மேலும் கழுதை குட்டியாகிய,*
> *மறியின் மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.*

*பரிசுத்த நகரத்துக்குள் இயேசு பிரவேசிப்பதற்கு தெரிந்து கொண்ட அவருடைய பிரயாணவாகனம் வரப்போகிற இஸ்ரவேலின் ராஜா குறித்த இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக உள்ளது. இந்த முறையில் பட்டணத்தில் பிரவேசித்ததால், இயேசுவானவர் தாமே அந்த ராஜாவாக இருப்பதாக உரிமை கோரினார்.*

*இயேசு இந்த காட்சியை உறுதிப்படுத்தும் விதத்தில் தான் ராஜாவாகவும் மற்றும் இஸ்ரவேலின் தேசிய பிரதிநிதியாகவும் இருப்பதாக எதுவும் சொல்லியுள்ளாரா? மாற்கு 10:42-45 ஐ வாசியுங்கள்:*

> *அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புற ஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில்*

எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாய் இருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

இயேசு தம்மை "பாடுபடும் தாசராக" (அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனை கொடுக்கிறவராக) கண்டார் என்பதை வசனத்தின் கடைசி வரி சுட்டிக்காட்டுகிறது. இந்த "தாசரின் பாடல்கள்/வேலைக்காரரின் பாடல்கள்" ஏசாயா 42:1-4 மற்றும் 52:13-53:12 இல் கூறப்பட்டுள்ளன. ஏசாயா 49:3: "நீ என் தாசன்; இஸ்ரவேலே, நான் உன்னில் மகிமைப்படுவேன்" என்று கூறுவதையும் கவனியுங்கள். இந்த வசனத்தில், அந்த "தாசர்" அந்த தேசமாக அடையாளப்படுத்தப்படுகிறார். மாற்கு 10:45 இல் இயேசு அந்த ஊழியத்தை தன்மேல் எடுத்துக் கொண்டார். அவர் தான் இஸ்ரவேலின் ராஜாவாக இருப்பதாக மட்டுமல்ல, உண்மையான இஸ்ரவேலின் பிரதிநிதியாக இருப்பதாகவும் உரிமை கோரினார்.

## மேசியா

முன்பு சுட்டிக்காட்டியபடி, "மேசியா" என்ற வார்த்தையானது, "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற அர்த்தத்தை தரும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்துள்ளது. பழைய ஏற்பாட்டில், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் நியாயாதிபதிகள் ஆகியோர் தேவனுக்கென்று சிறப்பு சேவை செய்யும்படி அபிஷேகம் பண்ணப்பட்டனர். முடிவாக, ஒரு தனித்தன்மையுள்ள மேசியா ஒருவர் வந்து, இஸ்ரவேலை அதின் எல்லா ஒடுக்குதலில் இருந்தும் முழுமையாக விடுதலையாக்குவார் என்ற ஒரு நம்பிக்கை உருவானது. இந்த நம்பிக்கையின் வேர், தாவீது தேவனுக்காக ஒரு வீட்டை கட்ட விருப்பம் தெரிவித்த 2 சாமுவேல் 7இல் காணப்படுகிறது. தேவனானவர் நாத்தான் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக, தாவீது தனக்காக ஒரு வீட்டை கட்டுவதை விரும்பவில்லை என்றும் தாம் அதைக் கேட்கவில்லை என்றும் பதில் அளித்தார். மாறாக, தாம் தாவீதுக்காக ஒரு வீட்டைக் கட்டப் போவதாக தேவனானவர் கூறினார். தேவனானவர் ஒரு குடியிருப்பை பற்றி கூறவில்லை, ஆனால் ஒரு சந்ததியை, ஒரு தொடர் சந்ததிகளை பற்றி (நாம் "வின்சர் வீடு" என்று பேசும் போது ஒரு தொடர் ஆட்சியாளர்களை அர்த்தப்படுத்துவது போல) கூறினார். இந்த ஆட்சியாளர்கள் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் என்றென்றும் அமருவார்கள், அது தாவீதின் "சந்ததியோடு" துவங்கும் இந்த "சந்ததி" தாவீதின் குமாரனாக மட்டும் அல்ல, தேவனுடைய குமாரனாகவும் மேலும் அடையாளப்படுத்தப்படுகிறார். தேவனானவர், "... அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன், நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான் ..." (2 சாமுவேல் 7:13, 14அ) இப்போது, இவைகள் யாவும் தாவீதின் பட்டத்து வாரிசான சாலொமோனை குறித்து பேசப்பட்டதாக இருந்திருக்கலாம். மேலும் தேவனானவர் "என்றென்றும்" என பேசத் தொடங்கினார். இங்கே கூறப்பட்டுள்ள சில வாக்குத்தத்தங்கள்

சாலொமோனுடைய ஆட்சிகாலத்தில் நிறைவேறவில்லை, வேறு ஒருவரை குறித்து அவைகள் சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது. இந்த "வேறொருவர் தான்" வரவிருந்த இஸ்ரவேலின் மேசியாவாக இருந்தார், இஸ்ரவேலின் வரலாற்றின் இருண்ட நாட்களில் விடுதலையாளர் ஒருவர் வருவார் என்ற எதிர்பார்ப்பு, தேவன் முடிவாக தம் ஜனத்தை மீட்டுக்கொள்ள, இந்த "அபிஷேகம் பண்ணப்பட்டவரை" அனுப்புவார் என்ற நம்பிக்கையை மக்களுக்கு தொடர்ந்து கொடுத்து வந்தது.

இயேசுவானவர் இந்த காட்சியில் எப்படி பொருந்துகிறார்? இயேசுவானவர் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி "இயேசு கிறிஸ்து" என அழைக்கப்பட்டிருக்கிறார் என்பதை நினைவில் வையுங்கள். "கிறிஸ்து" என்ற பதம் *கிறிஸ்டோஸ்* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது. அது "மேசியா" (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) என்ற எபிரெய வார்த்தைக்கு சமமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவானவரை "இயேசு கிறிஸ்து" என பேசியபோது, அவர்கள் அவருடைய முதல் மற்றும் கடைசி பெயர்களை குறிப்பிடுகிறவர்களாக இருக்க வில்லை. அவருடைய பெயர் இயேசு, அவர் இஸ்ரவேல் நீண்ட காலம் காத்திருந்த மேசியாவாக உரிமை கோரப்பட்டிருந்தார்.

மத்தேயு 16:13-17 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கியமான சம்பவத்தில் இயேசுவானவர் தமது சீஷர்களிடம் மக்கள் தம்மை யாரென்று கருதுவதாக கேள்வி கேட்டார். "... சிலர் யோவான் ஸ்நானன் என்றும் சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்" என்று பதில் அளித்தார்கள் இவைகளில் எதுவும் இழிவுபடுத்தக் கூடிய அடையாளங்கள் அல்ல; அவைகள் இயேசுவானவர் கலிலேயாவில் ஊழியம் செய்த போது, மக்கள் அவர் மேல் கொண்டிருந்த உயர்வான கனத்தை பிரதிபலிப்பதாக இருந்தது. அதே சமயத்தில் அவைகள் முழுமையான உண்மைகளும் அல்ல, ஆகவே இயேசு இன்னும் கொஞ்சம் வலியுறுத்தி கேட்டார்: "*நீங்கள்* என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" (வலியுறுத்துதல் என்னுடையது), அவர் அவர்களோடு சில காலம் இருந்த பின்னர், அவர்கள் அவரைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? அவர்கள் என்ன முடிவுகளுக்கு வருகிறார்கள்? மற்ற மக்கள் என்ன நினைத்தார்கள் என்பது முக்கியமானதாயிருக்கிற வேளையில், அப்போஸ்தலர்கள் என்ன நினைத்தார்கள் என்பது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. பேதுரு அந்தக் குழுவினருக்காக பேசினார்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." அந்த பன்னிரண்டு பேர், இயேசுதான் இஸ்ரவேல் நீண்ட காலம் காத்திருந்த மேசியா என்ற முடிவுக்கு வந்திருந்தார்கள். இயேசு, "யோவானின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று பதில் உரைத்தார். பேதுரு தம்முடைய தெய்வீக அடையாளத்தை குறித்து கூறிய அறிக்கையை இயேசுவானவர் ஒத்துக் கொண்டதை, தேவன் தாவீதுக்கு வாக்களித்தபடியே, மற்றும் அவர் தேவனானவரை, "என் பிதா" என குறிப்பிட்டதையும் கவனியுங்கள்.

யூத அதிகாரிகள் இயேசுவிடம் நேரடியாக, "நீ கிறிஸ்துவா"? (மேசியா) என வினவிய சம்பவமும் சம அளவில் முக்கியமானதாக

இருக்கிறது. மூன்று சுவிசேஷங்களும் இந்த கேள்வியை பதிவு செய்துள்ளன அல்லது அதின் சிறிய மாற்றத்தை பதிவு செய்துள்ளன (மத்தேயு 26:63, 64; மாற்கு 14:61, 62; லூக்கா 22:67-71). மத்தேயுவில், இயேசுவின் பதில், "நீர் சொன்னபடிதான்." மாற்குவில் "நான் அவர்தான்" என்றுள்ளது மற்றும் லூக்காவில், "நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர் தான்" என்றுள்ளது. இப்போது, நமக்கு இவைகள் யாவும் ஒரேவிதமான பதிலாக காணப்படாது, ஆனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் யூத அதிகாரிகள் இயேசுவின் பதிலை நேர்மறை பதிலாக எடுத்துக் கொண்டார்கள். வித்தியாசங்கள் அநேகமாக இயேசு அரமாயிக் மொழியில் பேசியதால் உண்டாகியிருக்கலாம்; ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரும் அதை கிரேக்க மொழியில் எழுதியுள்ளனர். இயேசுவானவர் தமது தெய்வீக அடையாளத்தை அங்கீகரித்தார், ஆனால் தமது பதிலைப் பற்றி வேண்டு மென்றே சற்று நிச்சயமில்லாதவராக இருந்தார், ஏனெனில் தான் எந்த அர்த்தத்தில் அதை கூறினாரோ அந்த அர்த்தத்தில் அவர்கள் அதை புரிந்து கொண்டிருக்க வில்லை என்பதை அறிந்திருந்தார், அவர்களுடைய கேள்வி அநேகமாக, "நாங்கள் எதிர்பார்த்து காத்திருந்த அரசியல் - ராணுவ விடுதலையாளர் நீர்தான் என உரிமை கோருகிறீரா?" என்பது போல இருந்தது. இயேசு தம்மை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஒருவர் என உரிமை கோரினார், ஆனால் வித்தியாசமான அர்த்தத்தில்; அவர் தம் ஜனங்களை அவர்களின் மிகப்பெரிய விரோதியான - பாவத்திலிருந்து - அரசு உரிமை மற்றும் இராணுவ வலிமை எதுவும் இல்லாமல் விடுதலையாக்குவார்.

தம்மை மேசியா என்று தெளிவாக உரிமைகோரிய இன்னொரு சம்பவம் லூக்கா 4:16-21-ல் உள்ளது. இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தின் ஆலயத்தில் இருந்தார். வேத வசனம் வாசிக்கப்பட வேண்டிய நேரத்தில் இயேசு எழுந்து நின்றார். ஏசாயா தீர்க்கதரியின் புத்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது, அவர் புஸ்தகத்தை விரித்த போது,

> கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், ... கூறவும் ... அவர் என்னை அனுப்பினார் (ஏசாயா 61:1, 2அ, 3இ).

இந்த வசனப்பகுதி மேசியா வரும் காலத்தை பற்றியது என்று யூதரால் கருதப்பட்டது. அடுத்து என்ன நடந்தது என்பது அந்த சந்தர்ப்பத்தின் போக்கை மாற்றியது: "அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி, உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று" என்றார் (லூக்கா 4:21). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இயேசுவானவர் தம்மோடு மேசியாவின் காலம் துவங்கிவிட்டது என்றும், தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்ட அந்த ஒருவர் தாம் தான் என்றும்; கர்த்தருடைய ஆவி தம்மேல் இருப்பதாகவும், தாமே தரித்திரருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறவர் என்றும் உரிமை கோரினார்.

## மனுஷ குமாரன்

இயேசுவானவர் தம்மை மேசியாவாக எண்ணிக் கொண்டாலும், அதை வெளிப்படையாக கூறிய வசனங்களை நாம் இன்னும் குறிப்பிடவில்லை, சுவிசேஷங்களின்படி, இயேசு தம்மை "மனுஷ குமாரன்" என அழைத்துக் கொள்வதை விரும்பினார். இந்த தலைப்பு ஒரளவு பலபொருள்படும்படியானதாக இருந்தது. ஒருவரை "இன்னாரின் மகன்" என்று சொல்வது அந்த மனிதனுடைய குணாதிசயத்தை சுட்டிக் காட்டுவதற்க்கான யூதருடைய முறையாயிருந்தது. இயேசுவை காட்டிக் கொடுத்ததால், உதாரணமாக, யூதாஸ் "கேட்டின் மகன்" என அழைக்கப்பட்டான் (யோவான் 17:12). அப்போஸ்தலன் பவுலின் உடன் ஊழியக்காரரில் ஒருவருடைய பெயர் "ஆறுதலின் மகன்" என்று அர்த்தங்கொள்ளும் பர்னபா என்பதாக இருந்தது (நடபடிகள் 4:36), ஏனெனில் அவர் பவுலுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் ஊக்கம் அளிப்பவராக இருந்தார். "மனுஷ குமாரன்" என்பது சாதாரணமாக "மனுஷனை போன்றவர்" அல்லது "மனிதர்" என்று பொருள்படும் இதை நாம் இத்தோடு விட்டுவிட விரும்பலாம், ஆனால் தானியேல் 7:13, 14 அவ்விதம் செய்ய இயலாது என்ற கருத்தை முன்வைக்கிறது. தானியேல் தான் "மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவரை" கண்ட தரிசனத்தை விவரிக்கிறார்:

> இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

இந்த வசனப் பகுதியில் மனுஷகுமாரன் என்பவர் வெறும் "மனிதனை" குறிப்பதில்லை. இதினால், யூதரில் சிலர் "மனுஷ குமாரன்" என்பது மேசியாவுக்கான இன்னொரு பெயர் தலைப்பு என கருதினார்கள், இயேசுவானவர் தம்மை "மனுஷகுமாரன்" என அழைத்த போது அவர் அதை எந்த அர்த்தத்தில் சொன்னார் என மக்களை ஆச்சரியப்பட வைத்தது. அதைத்தான் இயேசு விரும்பினதாக தோன்றுகிறது. வெளிப்படையாக உரிமை கோராமலேயே, மேசியத்துவத்தை முன்வைக்கும் சாத்தியமான ஒரு தலைப்பாக அது இருந்தது.

அவர் ஏன், "நான் தான் மேசியா" என்று கூறமாட்டார்? அவர் அதற்கு ஒரு சிறந்த காரணத்தை உடையவராக இருந்தார். முதல் நூற்றாண்டு யூத மதத்தினர் மேசியா யாராக இருப்பார் மற்றும் அவர் என்ன செய்வார் என்பது பற்றி பல கருத்துக்களை உடையவர்களாக இருந்தார்கள். இவைகளில் பெரும்பாலானவைகள் அவர் ஒரு இராணுவ தலைவராக இருந்து, ரோம ஆட்சியை கவிழ்த்துவிட்டு, இஸ்ரவேலை ஒரு அரசியல் சார்ந்த நாடாக மீண்டும் நிலை நாட்டுவார் என்ற கருத்தை மையமாக கொண்டதாக இருந்தது. அவர் தாவீது இருந்தது போல, பெரிய யுத்தங்களை நடப்பிக்கும் ஒரு ராஜாவாக இருப்பார், அந்த வகையில் உண்மையில், "தாவீதின் குமாரனாக"

*இருப்பார். இயேசு மேசியத்துவ மொழிநடையை வெளிப்படையாக தமக்காக பயன்படுத்தியிருந்தால், அல்லது மற்றவர்கள் அப்படி செய்யும்படி உற்சாகப்படுத்தி இருந்தால், ஏற்படும் அரசியல் ரீதியான பாதிப்புகள் மிக மோசமானவைகளாக இருக்கும். அவர் இந்த சூழ்நிலையை தவிர்க்க விரும்பினார். அதிருப்தி அடைந்த மற்றும் நம்பிக்கை இழந்த யூதர்கள் யார் தன்னை மேசியா என்று உரிமை கோரினாலும் அவரைப் பின்பற்ற ஆயத்தமாயிருந்தார்கள், ஆனால் இயேசு ஒரு கிளர்சியை உண்டாக்குவதில் ஆர்வம் அற்றவராக இருந்தார். அது அவருடைய ஊழியத்தின் நோக்கமாக இருக்கவில்லை. மேலும், அவருடைய சீஷர்கள் அந்த வார்த்தையை அவர் எந்த அர்த்தத்தில் சொன்னார் என்பதை புரிந்து கொள்கிறவரையிலும், அதை* அவர்கள் *பயன்படுத்துவதை விரும்பவில்லை. மத்தேயு 16:20, 21 இல் பேதுரு இயேசுதான் மேசியா என சரியாக அடையாளங்கண்ட பிறகு, "அப்பொழுது, தாம் கிறிஸ்துவாகிய இயேசு என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்" என வாசிக்கிறோம். ஏன்? ஏனெனில் அவர்கள் மேசியத்துவத்தின் உண்மையான* அர்த்தத்தை *அல்லது தாம் எப்படிப்பட்ட மேசியாவாக இருப்பதற்கு வந்தார் என்பதை இன்னமும் புரிந்து கொள்ளாதிருந்தார்கள். "அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதை தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" என்று அடுத்ததாக வாசிக்கிறோம். இந்த மேசியா போரிட்டு ஜெயிப்பவராக மற்றும் கொல்லுகிறவராக அல்ல, பாடுபட்டு மற்றும் மரிக்க வேண்டியவராக இருந்தார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் வரையிலும் அவரை மேசியா என அழைக்காமலிருப்பது நல்லதாயிருந்தது.*

*இவைகள் யாவும் இயேசுவின் காலத்து யூதர்களுடைய அரசியல் மற்றும் மேசியா எதிர்பார்ப்புகள் பற்றி நாம் அறிந்திருப்பவைகளோடு நன்கு பொருந்தி வருகிறது. இயேசு, தாம் மேசியா என்பதை தெளிவாக நம்பினார்; அவர் தம்மை "மனுஷ குமாரன்" என அழைப்பதை விரும்பிய போதிலும், தாம் மேசியா என்பதை மறைமுகமாக உரிமை கோரினார்.*

## தேவனுடைய குமாரன்

*இயேசுவின் கேள்விக்கு மத்தேயு 16:16 இல் பேதுரு அளித்த பதில் இரண்டு பகுதிகளை உடையதாக இருந்தது: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ..." அது போலவே, பிரதான ஆசாரியன் இயேசுவின் "யூத விசாரணையில்," "... நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என கேட்டான் (மத்தேயு 26:63), இந்த இரு சந்தர்ப்பங்களிலும் இயேசுவானவர் தம்முடைய மேசியா என்ற நிலை மற்றும் தேவனுடைய குமாரன் என்ற நிலை ஆகிய இரண்டையும் உறுதிப்படுத்தும்படி பதில் அளித்தார்.*

*இன்னும் சற்று பின்நோக்கி போய், மத்தேயு 11:25-27- க்கு செல்வோம்:*

> *அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம்,*

> பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்.

இயேசுவானவர் தேவனை, "என் பிதா" என அழைத்தார் மற்றும் தாம் மாத்திரமே பிதாவை வெளிப்படுத்திறவர் என உரிமை கோரினார். இதற்கு தொடர்புடைய ஒரு பகுதி யோவான் 5:16-18. இயேசு அப்போது தான் ஒரு முடவனை சுகமாக்கியிருந்தார். அவர் ஓய்வு நாளில் அதை செய்ததற்காக யூத அதி காரிகளால் துன்புறுத்தப்பட்டு வந்தார். இயேசுவானவர் இந்த குற்ற சாட்டிற்கு, "என் பிதா இது வரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" என்றார். இது தேவனுடைய குமாரன் என்பதற்கான இன்னொரு உரிமை கோரலாக இருக்கிறது. பின்வருவது அதை இன்னும் அதிகமாய் கூறுகிறது:

> அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப்பிதா என்றுஞ்சொல்லித் *தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே*, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள் (வசனம் 18; வலியுறுத்தல் என்னுடையது)

இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என உரிமை கோரியபோது அதை தாம் "தேவனுக்கு சமமாக" இருப்பதாக அர்த்தப்படுத்தினார் என்பதை யூத அதிகாரிகள் புரிந்து கொண்டிருந்தனர். பின்னர், இயேசு, "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என உறைக்கத்தக்க விதத்தில் கூறினார் (யோவான் 10:30). சில நேரங்களில் கருதப்பட்டது போல, இது இயேசு மற்றும் பிதா ஆகியோர் ஒரே *நபராக* இருக்கிறார் என்ற அர்த்தத்தை கொடுப்பதில்லை, அவர்கள் சம அளவில் இருக்கிறார்கள் மற்றும் நோக்கத்தில் ஒன்றாக இருக்கிறார்கள் - ஒருவருக்கு எது உண்மையாக இருக்கிறதோ அது மற்றவருக்கும் உண்மையாக இருக்கிறது என்ற உரிமை கோரலை உடையதாக இருக்கிறது.

இயேசுவானவர் தாம் தேவனுடைய குமாரன் என உரிமை கோரினார். அதின் உண்மையான பொருள் என்ன? "இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கிறார்" என்பது கிறிஸ்தவ விசுவாசத்தின் பொதுவான அறிக்கைகளில் ஒன்றாக இருக்கிறது, ஆனால் இந்த வாக்கியம் நமக்கு என்ன சொல்கிறது என்பதை எப்போதாவது நாம் நின்று கேட்கிறோமா? சிறப்பாக, இயேசு அதை எந்த அர்த்தத்தில் கூறினார்?

முதலாவதாக, அது இயேசு மற்றும் தேவன் ஆகியோருக்கு இடையிலான ஒரு தனித்தன்மையுள்ள உறவை சுட்டிக்காட்டுகிறது. ஒரு பொதுவான அர்த்தத்தில், மக்கள் மற்றும் தூதர்கள் ஆகியோர் கூட சில நேரங்களில் வேதாகமத்தில் "தேவ குமாரன்" என அழைக்கப்படுகிறார்; ஆனால் இயேசுவானவர் இதற்கு மேலான ஒன்றை தெளிவாக கூறிக்கொண்டிருந்தார். அப்படி இல்லாதிருந்தால், அவருடைய விரோதிகள் அவருடைய விஷயத்தில் அந்த அளவு அதிருப்தி அடைந்திருக்க மாட்டார்கள். யோவான் 3:16, "தேவன், *தம்முடைய ஒரே*

*பேறான குமாரனை* விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று கூறுகிறது. (வலியுறுத்தல் என்னுடையது) "ஒரே பேறான குமாரன்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை (*monogenes*) என்பது "தனித்தன்மையுள்ள," "ஒன்று மற்றும் ஒன்றான" என அர்த்தப்படுகிறது. இயேசு தம்மை தேவனுடைய "குமாரன்" என அழைத்ததின் மூலம் அவர் தமக்கு தேவனோடு ஒரு தனித்தன்மையுள்ள உறவு இருப்பதாக உரிமை கோரினார்.

இரண்டாவதாக, ''தேவனுடைய குமாரன்'' என்பது குறைந்தது தேவனுக்கு சமமாக இருப்பதை *மறைமுகமாக உணர்த்துகிறது*, இது இயேசுவின் சொந்த வார்த்தைகளில் தெளிவாக இருக்கிறது ("நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்") மற்றும் இதை கேட்டவர்கள் நடந்து கொண்ட விதத்திலும் (அவர் தம்மை "தேவனுக்கு சமமாக்கினார்" என்பதை புரிந்து கொண்டார்கள்) இது தெளிவாக தெரிகிறது. தேவ குமாரன் என உரிமை கோருவது தேவனாக இருப்பதாக உரிமை கோருவதாக இருக்கிறது. இயேசுவானவர் தாம் "தேவனுக்கு நெருக்கமாக" இருப்பதாக கூறவில்லை. மாறாக, "தேவனும் நானும் ஒரே சாரமாக இருக்கிறோம், நாங்கள் ஒன்றாயிருக்கிறோம்" என அவர் கூறுவது போல இருக்கிறது. இதினிமித்தம் தான் இயேசு பாவங்களை மன்னிக்க தமக்கு அதிகாரம் இருப்பதாக கூறினார் (மாற்கு 2:5-7), இது ஒவ்வொருவரும் ஒரு நாளில் அவருக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் நிற்போம் என்பதை குறித்தது (காணவும் மத்தேயு 7:22, 23), மற்றும் முற்றிலுமாக தமக்கு விசுவாசமாக, உண்மையாக இருக்கும்படி பணித்தார் (மத்தேயு 10:32, 33).

மூன்றாவதாக, இயேசு தம்மை தேவனுடைய குமாரன் என அறிவித்திருந்தது (காணவும் மத்தேயு 10:32, 33; லூக்கா 10:22) 2 சாமுவேல் 7ஆம் அதிகாரத்தில் தேவன் தாவீதிக்கு ஒரு ''வீட்டை கட்டுவதாக'' வாக்குத்தத்தம் செய்த போது கூறப்பட்ட "தாவீதின் குமாரன்" உடன் தம்மை அடையாளப்படுத்தி கொள்வதாக இருந்தது. மேலும் தேவன், "நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான் ..." என்று கூறினார் (2 சாமுவேல் 7:14). தேவனுடைய குமாரனாயிருப்பதன் உரிமை கோருதல், மேசியாவாக இருப்பதான உரிமை கோரலோடு ஒத்துப்போகிறது.[2]

## இயேசுவின் சுய அடையாளத்திற்கான பிற அடையாளங்கள்

இயேசுவானவர் தாம் இஸ்ரவேலின் மேசியாவாக, மனுஷ குமாரனாக மற்றும் தேவனுடைய குமாரனாக இருப்பதாக கூறினார். அவர் தாம் யாராக இருப்பதாக நினைத்தாரோ அதை நாம் புரிந்து கொள்ள உதவியாக அவர் வேறு என்ன கூறியுள்ளார்?

யோவான் சுவிசேஷத்தில் பதியப்பட்டுள்ள இயேசுவின் போதனைகளின் ஒரு சிறப்பு என்னவென்றால், அவர் தாம் கூறிய சிறப்பான வாக்கியங்களுக்கு முன்னால், "மெய்யாகவே, மெய்யாகவே நான் உனக்கு சொல்லுகிறேன் ..." (சில மொழிபெயர்ப்புகளில் ஆமேன், ஆமேன், நான் உனக்கு சொல்லுகிறேன் என்றுள்ளது.) என்பதாகும் (யோவான் 5:19, 25; 6:26, 47, 53; 8:34, 58). இந்த வார்த்தைகள் ஒரு வாக்கியத்துடன் பெரிய அதிகாரத்தை சுட்டிக் காட்டுகிறது,

*இது பேசுகிறவருடைய குணாதிசயத்தை உத்தரவாதம் செய்யக் கூடியதாக இருக்கிறது. அவைகள் இயேசு தம்முடைய உபதேசங்களுக்கு ஒரு சுய அதிகாரத்தன்மை இருப்பதைக் கண்டதை உணர்த்துகிறது: அவர் மற்றவர்களின் வார்த்தைகளை மேற்கோள் காட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை; அவர், "தம்மையே மேற்கோள்" காட்டினார். இயேசு தம்மை யாரென்று கூறினாரோ, அவராக அவர் இல்லாதிருந்திருந்தால், அவர் அசாதாரணமான பெருமை உடைய ஒருவராக இருந்தார்.*

*இயேசுவின் இன்னொரு உரிமை கோருதல் லூக்கா 6:1-5இல் காணப்படுகிறது. இயேசு மற்றும் அவருடைய சீஷர்கள் ஒரு ஓய்வுநாளில் வயல் வழியே கடந்து சென்றனர். சீஷர்கள் பசியாயிருந்தார்கள் மற்றும் கதிர்களைக் கொய்து, தானியத்தை சாப்பிட்டார்கள். நியாயப்பிரமாணத்தின் பாதுகாவல்கள் என்று தங்களை கருதிய பரிசேயர்களை பொறுத்தவரை அது ஒரு "வேலையாக" இருந்தது, அவர்கள் இயேசு மற்றும் அவருடைய சீஷர்களை குறை கூறினர். இயேசு அவர்களுடைய குற்றச்சாட்டுக்கு இரண்டு விதங்களில் பதில் அளித்தார். (1) தாவீது மற்றும் அவனுடைய மனிதர் சமஅளவில் தேவாலயத்தில், "சட்டவிரோதமாக" பழைய ஏற்பாட்டில் செய்த செயல் பற்றிய வசனங்கள் அவர்களுக்கு நன்கு தெரியாமலிருந்தது என்பதை சுட்டிக் காட்டினார். தாவீது சவுலுக்கு விலகி ஓடியபோது, தேவனுக்கு பரிசுத்த காணிக்கையாக படைக்கப்பட்டிருந்த, "தேவ சமூகத்து அப்பங்களை" புசித்தான். மனித தேவைகள் அவசியமாயிருந்தபோது, ஓய்வுநாள் சட்டங்கள் மீறப்பட்டதற்கு இது ஒரு முன் உதாரணமாய் இருந்தது. (2) அவர்களுடைய காதுகளில் தூஷணமாக ஒலித்த ஏதோ ஒன்றை இயேசு சொல்லியிருக்க வேண்டும்: "மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்." வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இஸ்ரவேலின் மிக புனிதமான நிறுவனங்கள் ஒன்றின் மேல் தமக்கு அதிகாரம் இருந்தாக கூறினார். ஓய்வுநாள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட, ஒரு தெய்வீக காரியமாக இருந்தபடியால், இது தெய்வீக தன்மைக்கான ஒரு தவறாத உரிமைகோரலாக இருந்தது.*

*இவ்விதமாகவே, இயேசுவின் தேவாலய "சுத்திகரிப்பு" (இன்னொரு "செயல் முறை உவமை") அதின் மேல் அவருக்கிருந்த அதிகாரத்தை உரிமை கோருவதாக இருந்தது. இயேசுவானவர் தேவாலயத்தை அதின் சிறப்பான பயன்பாட்டிற்காக சுத்திகரிக்கவில்லை; மாறாக, அது பிரதிநிதித்துவப்படுத்திய நடைமுறைக்கு எதிராக ஒரு தெய்வீகமான தீர்ப்பை அளித்தார். "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என பிரதான ஆசாரியர், வேதபாரகர் மற்றும் மூப்பர் ஆகியோர் அவரிடத்தில் கேட்டதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை (லூக்கா 20:2). தேவனுடைய அதிகாரத்தின் கீழ் இயங்குவதாக நம்புகிற ஒருவர்தான், இப்படிப்பட்ட காரியத்தை செய்ய துணிவு கொள்வார்.*

*இறுதியாக ஒரு உதாரணத்தை பரிசீலிப்போம். யோவான் 8ம் அதிகாரத்தில் யூதர்கள், இயேசுவை ஒரு பேய் பிடித்தவரென்றும் மற்றும் சமாரியன் என்றும் குற்றப்படுத்தி இகழ்ந்தார்கள் (8:48). அவர் அவர்களை அவர்களுடைய பிதாவான பிசாசின் கிரியைகளை செய்வதாக குற்றப்படுத்தினார். இறுதியாக, அவர்கள் "எங்கள் பிதாவாகிய ஆபிரகாம்" என்ற உறவின் அடிப்படையில் தங்கள் தற்காப்பு வாதத்தை வைத்தார்கள் (8:53). இயேசு, "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம்*

என்னுடைய நாளைக்காண ஆசையாயிருந்தான், கண்டு களிகூர்ந்தான்'' என்றார் (8:56). இது ஒரு பிரமிப்பான கேள்வியை கொண்டுவந்தது: "உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லை, நீ ஆபிரகாமைக் கண்டாயோ?'' பின்பு அவரை கொல்லும் நோக்கத்தில் கற்களை எடுக்கத் தக்கதாக இயேசு ஒன்றை கூறினார்: "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்'' (8:58). நாம் இங்கே இரண்டு முக்கியமானவைகளை கவனிக்க வேண்டும் (1) ஆபிரகாமுக்கு முன்னதாக இயேசு இருந்ததாக உரிமைகோரிக் கொண்டிருந்தார், குறிப்பாக தம்முடைய தெய்வீக தன்மையை உரிமைகோரினார். (2) அவர் தம்முடைய வாக்கியத்தை *ego eimi*: "நான் இருக்கிறேன்'' என்ற வார்த்தைகளோடு முடித்தார். வேத வசனங்களை அறிந்திருந்த எந்த யூதனும், தேவன் எரிகிற முள் புதரில் மோசேயிடம் என்ன கூறினாரோ அதின் நினைவுபடுத்துதலாக இது இருந்தது என்பதை அறிந்திருந்தான் (யாத்திராகமம் 3). பார்வோனிடத்தில் போய் இஸ்ரவேலை விடுவிக்கும்படி கேட்க தன்னை அனுப்புகிறவர் யார் என மோசே கர்த்தரிடத்தில் கேட்டபோது, தேவன் "நான் இருக்கிறேன்'' என்பவர் என்னை அனுப்பினார் என்று "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக'' என்றார், "நான் இருக்கிறேன்'' என்பது அவருடைய ஜனங்கள் தேவனை அறிந்து கொண்ட ஒரு உடன்படிக்கையின் பெயராக மாறியது. இயேசு, "*நான்* இருக்கிறேன்'' என்று கூறியபோது யூதர்கள் அவரை கல்லெறிய சிந்தித்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை! (வலியுறுத்தல் என்னுடையது)! இது ஒன்றே மேன்மையான சத்தியமாக இருந்தது அல்லது முழுமையான தூஷணமாக இருந்தது.

## முடிவுரை

"இயேசு தாம் யாராக இருந்ததாக கூறினார்?'' என்பது ஒரு சாதாரண கேள்வி போல தோன்றலாம், ஆனால் அது பல பாகங்களை கொண்ட பதிலை கொண்டுள்ளது. இயேசு தம்மை இஸ்ரவேலின் மேசியா, மனுஷ குமாரன் மற்றும் தேவனுடைய சொந்த குமாரன் என நம்பினார். இந்த வாக்கியங்கள் அவரைப் பற்றி உண்மையானவைகள் என்று நம்பாதவர்கள் கூட, சான்றுகளின் அடிப்படையில், அவர் தம்மை குறித்து இவ்விதமாகத்தான் உரிமை கோரினார் என்பதை அங்கீகரிக்க வேண்டும். அதின் பிறகு, அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் நீண்ட காலத்துக்கு முன்பு கேட்ட கேள்வியை நாம் எதிர்கொள்ள வேண்டும்: "*நீங்கள்* என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?'' (மத்தேயு 16:15; வலியுறுத்தல் என்னுடையது).

---

குறிப்புகள்

[1]R. W. Funk, *Honest to Jesus* (San Francisco: HarperSanFrancisco, 1996), 300. A critique of this approach appears in James D. G. Dunn, *A New Perspective on Jesus: What the Quest for the Historical Jesus Missed* (Grand Rapids, Mich.: Baker Academic, 2005), 21-22. [2]A statistical summary of various titles used for Jesus in the New Testament is given in Craig A. Evans, *Fabricating Jesus: How Modern Scholars Distort the Gospels* (Downers Grove, Ill.: InterVarsity Press, 2006), 191-93.